

## பா.ஜ.க. அரசு, தேர்தல் ஆணையத்துக்குப் பின் ஒளிந்துகொண்டு

# சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் எனும் சதித்திட்டம்: கழக உடன்பிறப்புகள் நிச்சயம் முறியடிப்பார்கள்!

## இராணிப்பேட்டை கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**இராணிப்பேட்டை, நவ.5-**

**இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சந்தித்து கலந்துரையாடினார்.**

**அப்போது அவர், ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் ஆணையத்துக்குப் பின் ஒளிந்துகொண்டு, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற ஒரு சதித்திட்டத்தை தமிழ்நாட்டிலும் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். அதனை நம் கழக உடன்பிறப்புகள் நிச்சயம் முறியடிப்பார்கள். தலைவர் சொன்னதுபோல ஒவ்வொரு வாக்குச்சாவடியும் நம்முடைய வாக்குச்சாவடி, `என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்பதை நாம் தேர்தலில் நிரூபித்து காட்ட வேண்டும்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.எல்.சி. நிர்வாகிகளாகிய உங்களை எல்லாம் ஒரே இடத்தில் சந்தித்து, உங்களிடத்தில் உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### கலைஞரின் உடன்பிறப்புகள்

உங்களின் எழுச்சியையும் - உற்சாகத்தையும் பார்க்கும்போது, அந்த எழுச்சியும், மகிழ்ச்சியும் என்னுடன் தொற்றிக் கொள்கின்றன. இந்தக் கூட்டம், 4 நாட்களுக்கு முன்பே நடைபெற வேண்டிய ஆலோசனைக் கூட்டம். சென்னையில் பெய்த தொடர் கன மழை காரணமாக ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டதால், இந்தக் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன். அதனால் உங்களிடத்திலும், உங்கள் மாவட்ட அமைச்சர் இராணிபேட்டை காந்தி அவர்களிடத்திலும் முதலில் எனது மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் இன்றைக்கு இந்தக் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

முதலில் இராணிபேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் காந்தி அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு எழுச்சியுடன் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்றால், என்னைப் பார்க்க மட்டும் வரவில்லை. நாம் பார்ப்பதற்காக கூடிய கூட்டம் கிடையாது, நான் என்ன பேசுவேன் என்பதைக் கேட்பதற்காக கூடியிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். அதனால்தான் நான் பேசுவதில் ஜாக்கிரதையாக பேச வேண்டும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால், இங்கு வந்திருக்கும் நீங்கள் கலைஞரின் உடன்பிறப்புகள். நீங்கள் மிகவும் தெளிவாக இருப்பீர்கள். நான் ஏதாவது தவறாக பேசினாலும், நீங்கள் சுட்டிகாட்டுவீர்கள். நான் பேசி முடித்துவிட்டு உங்கள் அனைவருடனும் தனித்தனியாக புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு, உங்களுக்கும் உண்டு.

### 75 ஆண்டுகள் நிறைவு

இன்றைக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்து, 76ஆவது ஆண்டில் வெற்றி நடைப்போட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த 76 வருடத்தில், எத்தனையோ சவால்கள், துரோகங்கள், நெருப்பு ஆறுகளை நாம் கடந்து வந்திருக்கிறோம். எத்தனையோ நெருக்கடிகளையும் மீறி, இன்றைக்கும் நம் கழகத்தின் கருப்பு - சிவப்புக் கொடியைக் கையில் உயர்த்தி பிடிக்கிறோம் என்றால், அதற்கு காரணம் இங்கு வந்துள்ள கழக உடன்பிறப்புகள் உங்களின் கழகப் பற்றுதான்.

### நீங்கள்தான் காரணம்

கலைஞரைப் பற்றி நாம் அனைவரும் பெருமையாகப் பேசுவோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் கலைஞர். 13 முறை சட்டமன்றத்துக்குச் சென்ற ஒரே தலைவர் கலைஞர். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றாலும் சரி, வெற்றி வாய்ப்பை இழந்தாலும் சரி, கலைஞர் என்றைக்கும் அவர் நின்ற தேர்தலில் தோற்றதே கிடையாது. அதுதான் கலைஞரின் பெருமை.

கலைஞரைப்போல் நம் தலைவருக்கும் ஒரு பெருமை இருக்கிறது. கழகத்தின் தலைவராக நம் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அவர் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிப்பெற்ற ஒரே தலைவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான். இதுதான் தலைவருக்கும், கலைஞருக்கும் உள்ள பெருமைகள். இந்த பெருமைக்கெல்லாம் காரணம், நீங்கள் மட்டும்தான். உங்கள் உழைப்பு இல்லாமல் இவையெல்லாம் சாத்தியமே இல்லை. நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது, கலைஞர் கிடையாது, நம் தலைவர் கிடையாது, நீங்கள் இல்லாமல் திராவிட மாடல் அரசும் கிடையாது.

உங்களின் உழைப்பால்தான் 2021இல் நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவரின் உழைப்பு 50 சதவிகிதம் என்றால், அதற்கு நிகராக 50 சதவிகித உழைப்பு உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் அதற்கு பின்னால் இருக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்துக்குத்தான் முதல் கையெழுத்திட்டார்கள். இன்றைக்கு அந்தத் திட்டத்தின் மூலம், இந்த நான்கரை வருடத்தில் 820 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 8 கோடி பயணங்களை இராணிப்பேட்டை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பல மாநிலங்கள் பின்பற்றுகிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

### பஞ்சாப் முதல்வர்

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். ஒவ்வொரு நாளும் சுமார் 22 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். சமீபத்தில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து, இந்த திட்டத்தைப் பார்த்து பாராட்டி பேசினார். `அடுத்த ஆண்டிலிருந்து எனது மாநிலத்திலும் இந்த திட்டத்தை செயல்படுத்தப்போகிறேன்' என்று சொல்லி வாழ்த்திவிட்டு சென்றார்.

அரசுப்பள்ளியில் படித்த மாணவ மாணவிகள், உயர்கல்வியில் சேரும் போது, தமிழ்ப்புதல்வன் - புதுமைப்பெண் திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். இந்தத் திட்டங்கள் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரம் மாணவ - மாணவிகளுக்கு, இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். நாம் ஆட்சிக்கு வரும்போது கடும் நிதி நெருக்கடி இருந்தது. எதிர்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாது என்று நம்மை விமர்சித்தார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி இந்தத் திட்டத்தை நிறைவேற்றினார். இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். 26 மாதங்களாக ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு 26 ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.



சில இடங்களில் இந்தத் திட்டம் கிடைக்கவில்லை என்ற குறைகள் இருந்தன. மக்களின் குறைகளை தலைவரிடம் சொன்னவுடன், அதில் இருந்த விதிமுறைகள் சிலவற்றைத் தளர்த்தி `உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம்களை முதலமைச்சர் நடத்த சொன்னார். அந்த முகாம்களில் 30 லட்சம் மனுக்கள் இந்தத் திட்டத்திற்காக வந்துள்ளன. அவற்றையெல்லாம் சரிபார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். வருகின்ற டிசம்பர் 15ஆம் தேதி முதல் விடுபட்டுபோன மகளிரில், தகுதியான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை கொடுக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 71 ஆயிரம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகிறார்கள்.

### தமிழ்நாடு முதல் மாநிலம்

இந்த ஆற்காடு தொகுதிக்கு மட்டும் ஏராளமான திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் தந்து இருக்கிறார்கள். 35 கோடி ரூபாய் மதிப்பில் ஆற்காடு நகரத்தில் வெளிவட்ட சாலை அமைக்கும் பணி நடந்துகொண்டு இருக்கிறது. ஆற்காடு தொகுதி முழுவதும், `கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. ஆற்காடு நகரப் பகுதியில் 18 கோடி ரூபாய் மதிப்பில் கால்வாய்கள் புனரமைப்புப் பணி, சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. சுமார் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பில் புதிய வணிக அங்காடி என்று பல திட்டங்களை இந்த ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த மாதிரியான திட்டங்களால்தான், தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதல் மாநிலமாக விளங்கி வருகிறது. இதுவரைக்கும் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 11.19 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சியோடு இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்துகொண்டு இருக்கிறது என்றால், நம் தலைவர் கொண்டுவந்த பல்வேறு திட்டங்கள்தான் காரணம்.

இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ளமுடியாமல்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு நெருக்கடிகளை, தமிழ்நாட்டுக்குத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு இருக்கிறது.

நிதி உரிமை மொழி உரிமை - கல்வி உரிமையை மொத்தமாக மாநில உரிமைகளைப் பறிக்கிறார்கள். இப்படி பல்வேறு இடையூறுகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுத்து வருகிறது.

புதியக்கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். புதியக் கல்விக் கொள்கையில் சமஸ்கிருதத்தையும் இந்தியையும் மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். ஒன்றிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் வெளிப்படையாகவே சொன்னார்.

### ஒரே தலைவர், நம் தலைவர்தான்.

புதியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான், தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயைத் தருவோம் என்று மிரட்டினார். நிதி என்றால், ஒன்றிய அரசின் நிதி கிடையாது. நம் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசுக்குக் கட்டியுள்ள வரிப்பணம்.

ஆனால், நம் தலைவர் சொன்னார். நீங்கள் புதிய கல்விக் கொள்கையின் மூலமாக மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தியைத் திணிக்க முயற்சிக்கிறீர்கள். சமஸ்கிருதத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கிறீர்கள். குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் கொண்டு வர முயற்சிக்கிறீர்கள். 2,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுத்தாலும் உங்களின் புதிய கல்விக் கொள்கையை, தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டேன் என்று சொன்ன ஒரே தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் நம் தலைவர்தான்.

இன்றைக்கு மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம், அதை பின்பற்றுகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறார், அந்த முடிவை நாமும் எடுப்போம் என்று மற்ற மாநில முதலமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டாக நம் முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

தொகுதி மறுவரையறையைக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்து, நம் மாநிலத்தின் உரிமையைப் பறிக்க, ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது. பிரதமர் மோடி அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு பீகாரில் பிரச்சாரம் செய்தார். அப்போது ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களுக்கும், தான் பிரதமர் என்பதை மறந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான அவதூறுகளை அங்கு பரப்புகிறார். தமிழ்நாட்டில் பீகார் தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று பிரதமர் மோடி அவர்கள் பீகாரில் சொல்கிறார்.

இதற்கு முன் ஒடிசாவில் தேர்தல் வந்தபோது, அமித்ஷா அவர்கள் அங்கு இதேபோன்று ஒரு வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். இப்போது பீகாரில் தேர்தல் வந்ததும், பிரதமரே அந்த வேலையில் ஈடுபட்டு வருகிறார்.

ஒரு மாநிலத்துக்கும் இன்னொரு மாநிலத்துக்கும் சிண்டு முடிந்து விட்டு சண்டை மூட்டி விடுவதுதான் பிரதமரின் வேலையா? என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

### நம் ஆளுநர் மட்டும்தான்

தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து பீகார் தொழிலாளர்களும் நிம்மதியாக இருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. பீகாரில் இருந்து, இங்கு வந்து பல வருடமாக இருக்கிற தொழிலாளர்களே ஊடகங்களில் பேட்டி கொடுத்து இருக்கிறார்கள். எனக்கு தெரிந்து பீகாரில் இருந்து இங்கு வந்து தன் நிம்மதியை எல்லாம் தொலைத்துக்கொண்டு இருக்கிறார் என்றால் அது ஒரேயொருவர்தான். அது நம் ஆளுநர் மட்டும்தான். ஆனால், அந்த ஆளுநரைக்கூட நம் முதலமைச்சர் அவர்கள் பீகாரில் உள்ள அவரின் வீட்டுக்கு அனுப்ப விரும்பவில்லை. தலைவர் கோரிக்கை வைத்துள்ளார். தயவுசெய்து எங்கள் தமிழ்நாட்டின் ஆளுநராக ரவி அவர்களே தொடர வேண்டும். எங்களின் பாதி பிரச்சாரத்தை, அவரே செய்துகொண்டு இருக்கிறார் என்று தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்று தொடர்ந்து ஈ.டி. ஐ.டியை எல்லாம் வைத்துக்கொண்டு தமிழ்நாட்டு அரசுக்கு ஏதாவது தொல்லைக் கொடுக்கமுடியுமா என்று எல்லா வகையிலும் முயற்சித்தார்கள். இந்த முறை தேர்தல் ஆணையத்துக்குப் பின் ஒளிந்துகொண்டு அந்த வேலையை, ஒன்றிய பா.ஜ.க. அரசு ஈடுபட ஆரம்பித்துள்ளது. சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற ஒரு சதித்திட்டத்தை தமிழ்நாட்டிலும் கொண்டு வர முயற்சிக்கிறார்கள்.

அதனை நம் கழக உடன்பிறப்புகள் நிச்சயம் முறியடிப்பார்கள். தலைவர் சொன்னதுபோல ஒவ்வொரு வாக்குச்சாவடியும் நம்முடைய வாக்குச்சாவடி, `என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்பதை நாம் தேர்தலில் நிரூபித்து காட்ட வேண்டும்.

தலைவர் சொன்னதுபோல ஒவ்வொரு வாக்குச்சாவடியும் நம்முடைய வாக்குச்சாவடி, `என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்பதை நாம் தேர்தலில் நிரூபித்து காட்ட வேண்டும். அதனை நம் கழக உடன்பிறப்புகள் நிச்சயம் முறியடிப்பார்கள்.

பீகாரில் இந்த திட்டத்தைச் செயல்படுத்தி, கிட்டத்தட்ட 65 லட்சம் வாக்காளர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு தேர்தல் ஆணையம் மூலமாக நீக்கியுள்ளது. தேர்தலுக்கு இன்னும் 5 மாதம் மட்டுமே இருக்கும்போது, எதற்கு அவசர அவசரமாக இந்த அறிவிப்பை ஆணையம் வெளியிட வேண்டும் என்று நம் கழகத் தலைவர் அவர்கள் கேட்டுள்ளார். ஏனென்றால், பா.ஜ.க.வால் தமிழ்நாட்டில் என்றைக்கும் நேரடியாக வெற்றி பெற முடியாது. அதனால்தான், குறுக்கு வழியில் வெற்றி பெறலாம் என்று நினைக்கிறார்கள்.

நேற்றுகூட அனைத்துக்கட்சிக் கூட்டத்தை நம் தலைவர் அவர்கள் கூட்டியுள்ளார். அதில் அ.தி.மு.க கலந்துகொள்ளவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த எஸ்.ஐ.ஆர். திட்டத்தை வரவேற்றுள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட நிலைமை, அடிமைத்தனத்தை எடப்பாடி பழனிசாமி அவர்கள் கையில் எடுத்துள்ளார். குறிப்பாக, இந்த ஆற்காடு தொகுதியில் நிறைய இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். இந்த எஸ்.ஐ.ஆர் திட்டத்தின் மூலம் அவர்களின் பெயர்களை எல்லாம் நீக்க முயற்சி எடுக்கப் போகிறார்கள்.

### மக்களிடம் சேர்க்கவேண்டும்

எடப்பாடி பழனிசாமியின் நிலைமை, இருக்க இருக்க மிகவும் பரிதாபமாகப் போய் கொண்டு இருக்கிறது. முதலில் ஜெயலலிதா அம்மையார் காலில் விழுந்தார், அந்த அம்மா இறந்தபிறகு அவரின் தோழி சசிகலா காலில் விழுந்தார், அதற்பிறகு சசிகலா சிறைக்குச் சென்றவுடன் டி.டி.வி காலில் விழுந்தார். அதற்பிறகு டெல்லிக்குச் சென்று மோடி, அமித்ஷா காலில் விழுந்தார். ஆனால், இப்போது என்ன கொடுமை என்றால், மறுபடியும் தமிழ்நாட்டுலேயே விழுவதற்கு புது கால்கள் கிடைக்குமா என்று வலைவீசி தேடிக் கொண்டு இருக்கிறார். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். அவருக்கு விழுவதற்கு கால்கள் கிடைக்கும். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் அதே காலால் விரைவில் எட்டி உதைக்கப் போகிறார்கள். இதை நாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

எடப்பாடி பழனிசாமிக்கு தெரிந்தது இரண்டே விஷயம்தான். ஒன்று காலில் விழுவது, இன்னொன்று காலை வாருவது. இவை இரண்டிலும் அவர் நிபுணர். செங்கோட்டையன் அவர்களை நேற்று நீக்கியுள்ளார். மிக மிக மூத்த அரசியல்வாதி. திரு எம்.ஜி.ஆர் காலத்தில் அவர் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்தவர். அவர் நேற்று சொல்கிறார். துரோகத்துக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்றால் எடப்பாடி பழனிச்சாமிக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை செங்கோட்டையன் அவர்கள் சொல்கிறார்.

நான் சொல்கிறேன். துரோகத்துக்கு மட்டுமல்ல, அடிமைத்தனத்துக்கும் நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்றால், எடப்பாடி பழனிசாமிக்குத்தான் கொடுக்க வேண்டும். நமக்கு எதிராக மிகப்பெரிய கூட்டணியை உருவாக்கப் போகிறேன் என்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

நான்கூட அப்போது சொன்னேன். நீங்கள் எந்த நேரத்தில் பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்புனீர்களோ தெரியவில்லை. ஒவ்வொரு கூட்டம் செல்லும்போதும் அந்தப் பேருந்திலிருந்து கூட்டம் குறைந்துகொண்டே இருக்கிறது. கூட்டத்தை முடித்துவிட்டு வரும்போது, நீங்களும் அந்த டிரைவரும் மட்டும்தான் வருவீர்கள் என்றேன். அந்த அளவுக்கு ஒவ்வொருவரையும் நீக்கிக்கொண்டு இருக்கிறார்.

நமக்கு எதிராக மிகப்பெரிய கூட்டணி அமைக்கப் போகிறோம் என்று சொன்னார். இப்போது, பார்த்தீர்கள் என்றால், அ.தி.மு.கவினரே அவருக்கு எதிராக மிகப்பெரிய கூட்டணியை அமைத்து வருகிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி முதலில் சசிகலாவை நீக்கினார், அதன்பிறகு தினகரனை நீக்கினார், பிறகு ஓ.பி.எஸ்ஸை நீக்கினார், நேற்று செங்கோட்டையனை நீக்கி இருக்கிறார். இப்படி தொடர்ந்து நீக்கி, நீக்கி ஒருநாள் அவர் தன்னையே மறந்து, `எடப்பாடி பழனிசாமி கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்' என்று அவரே தன்னை நீக்கினாலும் நீக்கிக் கொள்வார்.

தேவர் குருபூஜைக்கு ஒரே காரில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் செங்கோட்டையனும், தினகரனும் சென்றார்கள். அதனால் எடப்பாடி பழனிசாமி செங்கோட்டையனை, கட்சியை விட்டு நீக்கியிருக்கார்.

அ.தி.மு.கவை இனிமேல் அ.தி.மு.க என்று நாம் அழைக்கத் தேவையில்லை. ஏ1 அ.தி.மு.க என்று அழைக்கலாம். ஏனென்றால் ஒருவரையொருவர் மாற்றி மாற்றி ஏ1 என்று கூப்பிட்டுக் கொள்கிறார்கள். சொல்லப்போனால், ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். ஜெயலலிதா அவர்கள் சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிமன்றத்தால் ஏ1 என்று சொல்லப்பட்டவர்தான் செல்வி ஜெயலலிதா அவர்கள். ஆனால், நேற்று செங்கோட்டையன் அவர்கள் சொல்கிறார். எடப்பாடி பழனிச்சாமி அவர்களைப் பார்த்து இவரும் ஏ1 என்று சொல்கிறார். இப்படி அ.தி.மு.கவை ஏ1 அ.தி.மு.கவாக அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அந்தத் தலைவர்களும் தொண்டர்களும் மாற்றி வைத்துள்ளார்கள்.

### தினமும் சந்தியுங்கள்

நமக்கு இருக்கக்கூடிய ஒரே பணி அடுத்த ஐந்து மாதங்கள்தான் நம்முடைய கைகளில் இருக்கின்றன. இன்றைக்கு நான் ஆற்காடு தொகுதியில் பேசிவிட்டு, நாளைக்கு வேறு தொகுதிக்கு சென்றுவிடுவேன். ஆனால், அடுத்த ஐந்து மாதங்கள் தொகுதியில் இருந்து மக்களை தினமும் சந்திக்க போவது நீங்கள்தான். மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கப்போவது நீங்கள்.

மக்களை தினமும் சந்தியுங்கள். அவர்களின் கோரிக்கைகளை காது கொடுத்துக் கேளுங்கள். நிச்சயமாக, அவர்களின் கோரிக்கைகளை உங்களால் தீர்க்க முடியும். உங்களால் தீர்க்க முடிந்தால், நீங்கள் தீர்த்து கொடுங்கள். அப்படி இல்லையென்றால் உங்களின் ஒன்றிய, நகர, மாவட்டச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், உங்களுடைய அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்களிடம் அதைத் தெரிவியுங்கள்.

நிச்சயம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டாலே அவர்களின் நம்பிக்கையை நாம் நிச்சயம் பெறுவோம். தினமும் திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள். மிகப்பெரிய கூட்டமோ, ஆடம்பர செலவோ செய்ய தேவையில்லை. திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம்முடைய அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

நிச்சயமாக இந்த நாலரை வருடத்தில் நம்முடைய அரசின் திட்டங்கள் ஏதாவது ஒரு திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களுடைய ஒவ்வொரு வீட்டிலும் யாராவது ஒருத்தராவது பயனடைந்திருப்பார்கள். அதை மக்களிடம் கொண்டு சேர்த்து நினைவுபடுத்தினாலே போதும்.

### வெல்வோம் இருநூறு

தலைவர் நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய இலக்கு 200. `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று நம் தலைவர் சொல்லி இருக்கிறார்கள். நான் உங்களிடத்தில் சொல்வது, நாம் அடுத்த நான்கு மாதம் வேறு எதைப்பற்றியும் கவலைப்படாமல், ஒற்றுமையோடு, நமக்குள் இருக்கக்கூடிய சின்ன சின்ன பிரச்சினைகள், மனமாச்சரியங்களை எல்லாம் மறந்துவிட்டு, வெற்றி ஒன்றே குறிக்கோள் என்று பணியாற்றினோம் என்றால், 200 இல்லை 200க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறும்.

நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால் அதற்கு நீங்கள் அத்தனைபேரும் அடுத்த ஐந்து மாதம் களத்தில் இருந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் இராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஈஸ்வரப்பன் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியை தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், சுற்றுச்சூழல் அணியின் துணைச் செயலாளர் வினோத் காந்தி, தொகுதி பார்வையாளர் மருது கணேஷ், சட்டத்துறையின் இணைச்செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், மாவட்டக் கழக அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் கலைமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், மல்லிகா அமரேசன், நகரக் கழகச் செயலாளர் சரவணன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பாண்டுரங்கன், அசோக், ரமேஷ், ஜனார்த்தனன், கலைச்சந்தர், பகுதிக் கழகச் செயலாளர் அய்யப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் பாபு, தாமோதரன், சேது ரவி, நகராட்சித் தலைவர் தேவி மென்ஸ் பாண்டியன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் சத்தியநாதன், திவ்யா கமலபிரகாஷ், பேரூராட்சித் தலைவர்கள் மனோகரன், மாலா இளஞ்செழியன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மருத்துவர் சரவணன், டான் பாஸ்கோ, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முரளி, பிரசாத், ரவி, காண்டீபன், சித்திக் பாஷா, சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மீஞ்சூர் பாஸ்கர், ஆதிசேஷன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

---

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழக நிர்வாகிகளுக்கு பதில்!

### சபாபதி, ஆற்காடு.

**கேள்வி:** போலி வாக்காளர்களைக் கண்டறிய என்ன ஆலோசனைகள் வழங்கப்படுமா?

**துணை முதலமைச்சர் :** இதற்குகாகத்தான் நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு வாரத்துக்கு முன்பு, சென்னையிலேயே அனைவரையும் அழைத்து ஒரு நிகழ்ச்சி நடத்தினார். `என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்ற அந்த முன்னெடுப்பின் மூலம் எஸ்.ஐ.ஆரை நாம் அத்தனை பேரும் எப்படி புரிந்துகொண்டு எதிர்கொள்வது என்பது பற்றி, அந்தப் பயிற்சியை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுக்கு, தலைவர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

கழக முன்னோடிகளான உங்களை மீறி, உங்கள் பூத்தில் யாராவது போலி வாக்காளர்களைச் சேர்க்க முடியுமா? இல்லை, நீங்கள்தான் சேர்க்க விட்டுவிடுவீர்களா? அந்த மனநிலைக்கு உங்களின் பணிகளை எல்லாம் நீங்கள் வகுத்துக் கொள்ளவேண்டும். உங்களின் பூத்தில் இருக்கக்கூடிய தகுதியான வாக்காளர்களை நீக்கவும் விடமாட்டீர்கள், போலி வாக்காளர்களைச் சேர்க்கவும் விடமாட்டீர்கள் என்ற அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது. தலைவர் சொன்னதுபோல ஒவ்வொரு வாக்குச்சாவடியும் நம்முடைய வாக்குச்சாவடி, `என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்பதை நாம் தேர்தலில் நிரூபித்து காட்ட வேண்டும்.

### முரளி, திமிரி ஒன்றியம்

**கேள்வி:** இல்லம் தேடி ரேஷன் பொருட்கள் வழங்கப்படுமா?

**துணை முதலமைச்சர் :** இதை ஏற்கனவே நம்முடைய தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து இரண்டு மாதங்களுக்கு முன்பு அதை செயல்படுத்தத் துவங்கிவிட்டோம். அதாவது வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று மாதாந்திர ரேஷன் பொருட்கள் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்களை எல்லாம் `தாயுமானவர் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் நம்முடைய தலைவர்கள் கொடுப்பதற்காக உத்தரவிட்டார்கள். இதில் பல்வேறு கோரிக்கைகள் வைத்தார்கள். இப்போது நேற்று தலைவர் அவர்கள் இன்னொரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே செய்த அறிவிப்பு 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவர்கள் வீடுகளுக்கே சென்று பொருட்கள் கொடுக்கப்படும் என்பது. இப்போது அந்த வயதை குறைத்து 65 வயதுக்கு மேற்பட்ட அத்தனை பேருக்கும் அவங்களுடைய வீடுகளுக்கே ரேஷன் பொருட்கள் சென்றடையும் என்ற திட்டத்தை நம்முடைய அரசு, முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

### சரவணன், பிண்டித்தாங்கல் ஒன்றியம்.

**கேள்வி:** மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களுக்கு எப்போது வழங்கப்படும்?

**துணை முதலமைச்சர் :** நான் பேசும்போது ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஏற்கனவே ஒரு கோடியே 20 லட்சம் பேருக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது 30 லட்சம் பேர் மீண்டும் விண்ணப்பித்துள்ளார்கள். அவை பரிசீலனைச் செய்யப்பட்டு, மீண்டும் இந்த டிசம்பர் 15ஆம் தேதியிலிருந்து விடுபட்டுபோன தகுதி வாய்ந்த அத்தனை மகளிருக்கும் அந்த உரிமைத் தொகை கொடுக்கப்படும்.

### சஞ்சீவி, திமிரி மேற்கு ஒன்றியம்.

**கேள்வி:** கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்துவது சிறப்பானது. இதனை தொடர்ந்து நீங்கள் நடத்த வேண்டும். செய்வீர்களா?

**துணை முதலமைச்சர் :** எனக்கும் கழக நிர்வாகிகளைச் சந்திக்க வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசைதான். நான் உங்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்தில்தான் சந்தித்ததில்லையே தவிர, அத்தனை பேரையும் சென்னையில் பலமுறை சந்தித்திருக்கிறேன். இந்த மாவட்டத்திற்கு வரும் பொழுதும் தனித்தனியாக சந்தித்தித்திருக்கிறேன். இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடத்தி இருக்கிறேன். ஒவ்வொரு சார்பு அணிகளுக்கும் தனியாக நிர்வாகிகள் சந்திப்பு நடத்தி இருக்கிறேன். ஆனால், ஒரு மாவட்டத்திற்கான, ஒரு தொகுதிக்கான அத்தனை நிர்வாகிகளையும் ஒரே இடத்தில் சந்திப்பது இது முதல் முறை.

தலைவர் அவர்கள் சென்னையில் ஒவ்வொரு தொகுதியாக, உடன்பிறப்பே வா என்ற முன்னெடுப்பின் மூலமாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய முக்கிய நிர்வாகிகளை எல்லாம் அழைத்துத் தொடர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள். தலைவர் எனக்கு இட்ட கட்டளை. நான் சென்னையில் அத்தனைபேரையும் சந்திக்கிறேன். நீ ஒவ்வொரு தொகுதியாக சென்று அங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளைச் சந்தித்து அவங்களோடு உரையாடி விட்டு அவர்களின் கோரிக்கை என்ன என்பதையும் கேட்டுவிட்டு வா என்று சொன்னார்கள். அதனுடைய முன்னெடுப்பின் காரணமாகத்தான் இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திக்கிறேன்.

இன்றைக்கு இந்த ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் நடப்பது போல கிட்டத்தட்ட இந்த ஒரு மாதத்தில் 14 சட்டமன்றத் தொகுதியில் என் சந்திப்புகளை முடித்துவிட்டேன். அடுத்து வர இருக்கின்ற இந்த நான்கு, ஐந்து மாதங்களில் 234 தொகுதிக்கும் சென்று அங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளை சந்திப்பதற்கான அந்தப் பணிகளில் என்னை நான் ஈடுபடுத்திக் கொள்ள போகின்றேன்.

### கோபால், ஆற்காடு பகுதி

**கேள்வி:** ஒன்றியச் செயலாளர்கள் தேர்தல் முடியும் வரை தொடர்ந்து தலைமையோடு தொடர்பில் இருக்க வேண்டும் என்ற என் கோரிக்கை ஏற்கப்படுமா?

**துணை முதலமைச்சர் :** தேர்தலுக்காக துவங்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். தேர்தலுக்காக மட்டுமல்லாமல், எப்பொழுதுமே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்களோடு இணைந்து செயல்பட வேண்டும்.

`ஓரணியில் தமிழ்நாடு',மாதிரி, `என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' போன்ற முன்னெடுப்புகள் மூலமாக தொடர்ந்து ஒன்றிய, நகர, கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகளுடன் தொடர்ந்து இணைப்பில் இருக்க வேண்டும். கழக நிர்வாகிகள் நாம் அனைவரும் ஒற்றுமையோடு இணைந்து செயல்பட்டால், 2026ல் நிச்சயம் மீண்டும் ஆட்சியை பிடிக்கப்போவது நம்முடைய திராவிட முன்னேற்ற கழகம்தான் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி பல்வேறு கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். நான் உங்களிடத்தில் சொல்லிக் கொள்வதெல்லாம் நம்முடைய இளைஞர் அணி அலுவலகம் அன்பகத்தின் கதவுகள் என்றைக்கும் உங்களுக்காக திறந்திருக்கும். இளைஞர் அணிக்கு மட்டுமல்ல, அனைத்து அணிகளுக்காகவும், அனைத்து நிர்வாகிகளின் குறைகளை, உங்களின் கோரிக்கைகளை எல்லாம் கேட்பதற்கு சென்னையில் இருக்கக்கூடிய இளைஞர் அணியின் தலைமை நிலையம் அன்பகத்தின் கதவுகள் என்றைக்கும் திறந்திருக்கும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

என்ன கோரிக்கை என்றாலும், நீங்கள் அதை அன்பகத்துக்கு எழுதி அனுப்பினீர்கள் என்றால், தொலைபேசி மூலமாக அழைத்துப் பேசினால்கூட நிச்சயமாக அந்த கோரிக்கைக்கு உங்களுக்கு என்ன செய்து கொடுக்க முடியுமோ, அதை நிச்சயம் செய்து கொடுப்போம் என்று கூறிக்கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்